" கண்ணைக் காப்பது இமை "
" மண்ணைக் காப்பது மழை "

## மதுரை மாநகராட்சி

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2009-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 27-ம் நாள் செவ்வாய்கிழமை காலை 10.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

-------------

**திருக்குறள் :** ***" அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்***
**எஞ்சாமை வேந்தர்க் கியல்பு"**

**பொருள் :** அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் என்ற இந்த நான்கு பண்பு நலன்களும் ஒழியாமல் இருத்தலே வேந்தனுக்கு இயல்பாம்.

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## <u>உறுதிமொழி</u>

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும், பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(செய்தி மற்றும் சுற்றுலாத்துறை அரசாணை (நிலை) எண்.245 நாள் 13.11.98)

### <u>1) மநி..3 / 30916 / 2008</u>

அரசாணை (நிலை) எண்.149 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத் (எ) துறை நாள்.19.8.2008ல் உடல் ஊனமுற்ற அரசு பணியாளர்கள் தினமும் மாலை நேரத்தில் 15 நிமிடங்கள் முன்னதாக அலுவலகத்தைவிட்டு செல்ல அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி அரசு ஆணையை மாமன்ற தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

மேற்படி அரசாணையின் அடிப்படையில் இவ்வலுவலக பணியாளர்களுக்கு விபரம் தெரிவித்து 22.9.2008–ல் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

**<u>மாமன்ற தீர்மானம் எண் .643</u>**
**<u>பதிவு செய்யப்பட்டது.</u>**

### <u>2) மநி.1 / 36491 / 2007</u>

மதுரை மாநகராட்சியில் பொது சுகாதார பணிகளின் காலியாக இருந்து வந்த உதவி நகர்நல அலுவலர் அலுவலர் பணியிடத்தில் Dr.வி.யசோதாமணி என்பவரை பணி மாறுதலில் மதுரை மாநகராட்சியில் உதவி நகர்நல அலுவலராக பணியமர்த்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ள நலவாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அரசாணை எண்.2143, நாள்:19.11.2008–ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>குறிப்பு :</u>** Dr.வி.யசோதாமணி, உதவி நகர்நல அலுவலராக 24.12.2008 முற்பகல் முதல் பணியேற்றுள்ளார்.

**<u>மாமன்ற தீர்மானம் எண் .644</u>**
**<u>பதிவு செய்யப்பட்டது.</u>**

## 3) HF1 / 20430 / 06

அரசு ஆணை எண்.360 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை (N2) நாள்.17.10.2008ல் ஏ.என்.எம்/மகப்பேறு உதவியாளர்கள் சீருடைப்படி ரூ.250/- லிருந்து ரூ.500/-ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது எனவும் இந்த சீருடைப்படி ரூ.500/- அரசாணை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பேரில் மதுரை மாநகராட்சியில் பணிபுரியும் பல்நோக்கு சுகாதார பணியாளர்களுக்கு 2008-2009 முதல் ரூ500/- வழங்குவதற்கு மேற்கண்ட அரசாணையை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .645**
**பதிவு செய்யப்பட்டது.**

## 4) மநி.1/ 42939 / 2007

மதுரை மாநகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கென அனுமதிக்கப்பட்ட நான்கு உதவி மின் பொறியாளர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரிய கடிதம் எண்.08587/55 G14/G141/2008-3, நாள்:16.9.2008-ன்படி ஓராண்டிற்கு மட்டும் அயற்பணியின்கீழ் பணியமர்த்தப்பட்ட உதவி மின்பொறியாளர்கள் பணியில் சேர்ந்துள்ள விபரத்தினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | பணியேற்றுள்ள மண்டலம் | அயற்பணியின்கீழ் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.ராமசந்திரன்<br>உதவி மின்பொறியாளர் | வடக்கு மண்டலம் | 05.11.2008 முற்பகல் |
| 2 | திரு.வி.முத்துகிருஷ்ணன்<br>இளநிலை மின்பொறியாளர் | தெற்கு மண்டலம் | 19.11.2008 முற்பகல் |
| 3 | திரு.கே.ஜி.சாந்தாராம்<br>உதவி மின்பொறியாளர் | கிழக்கு மண்டலம் | 08.12.2008 முற்பகல் |
| 4 | திரு.ஆர்.குமார்<br>உதவி மின்பொறியாளர் | மேற்கு மண்டலம் | 12.12.2008 பிற்பகல் |

குறிப்பு: மண்டல அலுவலகங்களில் உதவி மின்பொறியாளர்களாக பணிபுரிந்து வந்த திருவாளர்கள் திரு.ஆர்.கிருஷ்ணன், எஸ்.மீனாட்சி சுந்தரம் மற்றும் திரு.கே.எம். ராஜாராம் ஆகியோர் ஏற்கனவே அயற்பணியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

**மாமன்ற தீர்மானம் எண் .646**
**பதிவு செய்யப்பட்டது. .**

## 5) மநி..1 / 18107 / 2006

மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களில் காலியாக இருந்த கண்காணிப்பு பொறியாளர் பணியிடத்தில் திரு.ஆர்.விஜயகுமார், செயற்பொறியாளர்(சேலம்) அவர்களை ஒப்பந்த அடிப்படையில் மாற்று பணியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் கண்காணிப்பு பொறியாளராக பணியமர்த்தி வெளியிடப்பட்டுள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் **154** எண்ணிட்ட **1612.2008**–ந் தேதிய அரசாணையினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு: திரு.ஆர்.விஜயக்குமார், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் கண்காணிப்பு பொறியாளராக 17.12.**2008**–ந் தேதி முதல் பணியேற்றுள்ளார்.

**மாமன்ற தீர்மானம் எண் .647**
**பதிவு செய்யப்பட்டது.**

## 6) கிமபொ.7 / 15546 / 2008

மதுரை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண்.**46**, 4A, பந்தடி குறுக்குத்தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ மொட்டை பிள்ளையார் கோவிலுக்கு பொது மக்களும் பக்தர்களும் அதிக அளவில் வருகிறார்கள் என்பதால் மேற்படி கோவிலில் பொது மக்கள் வசதிக்காக இலவச பொதுக்குழாய் இணைப்பு வழங்க **46**–வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று ஸ்ரீ மொட்டை பிள்ளையார் கோவிலுக்கு பொது மக்களுக்கும், பக்தர்களுக்கும் பயன்படும் வகையில் இலவசமாக பொதுக்குழாய் இணைப்பு வழங்க மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .648**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 7) H1 /39171 /08

மதுரை மாநகராட்சி மைய சுகாதாரப் பிரிவு UHP 4 நலவாழ்வு மையத்தில் மருத்துவ அலுவலராக பணியாற்றும் திருமதி. M.ஸ்ரீதேவி என்பவர் தனது கணவர் சென்னையில் வசிப்பதால் தன்னை சென்னை மாநகராட்சிக்கு ஒருவழி பாதையில் பணிமாறுதல் செய்யக்கோரி 18.11.08-ந் தேதி மனு செய்துள்ளார். அன்னாரின் மனுவினை சென்னை மாநகராட்சிக்கு பரிந்துரை செய்து அனுப்புவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .649**

**இவரை பணிமாறுதல் செய்வதால் ஏற்படும் இந்த காலியிடத்தின் பணி பாதிக்கப்படும் என்பதை கருத்தில் கொண்டு இந்த மனுவை பரிசீலனை செய்ய வேண்டியதில்லை என மாமன்றம் தீர்மானிக்கிறது.**

## 8) H2 / 26647 / 08

மதுரை மாநகராட்சிக்கு உட்பட்டுள்ள பகுதிகளில் வசதித்து வரும் 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வறிய நிலையில் உள்ள பயனாளிகளைக் கண்டறிந்து அரசு ஆணை எண்.(எம்.எஸ்.) 217 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட துறை நாள்.16.11.07- ன்படி இந்திராகாந்தி தேசிய முதியோர் உதவி திட்டத்தின்கீழ் பயனடைவதற்கு கணக்கெடுப்பு குழுவினரால் (கிராம நிர்வாக அலுவலர், வார்டு உறுப்பினர், சுகாதார அலுவலர் மற்றும் சுகாதார மேற்பார்வையாளர்) கண்டறியப்பட்டு சான்றளிக்கப்பட்ட பயனாளிகளின் பட்டியலை மதுரை மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .650**

**அரசு ஆணை பதிவு செய்யப்பட்டது. அரசாணையில் கணக்கெடுப்பு குழு அமைந்துள்ளதன்படி ஒவ்வொரு வார்டு வாரியாக பயனாளிகளை கண்டறிந்து கணக்கெடுப்பு குழுவால் சான்றளிக்கப்பட்ட பட்டியலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு அனுப்ப மேயர் மற்றும் ஆணையாளர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கி மாமன்றம் தீர்மானிக்கிறது.**

## 9) B 30/ 29070/ 08

மதுரை மாநகராட்சி வைகை குடிநீர் திட்டம் பண்ணைபட்டி வைகை குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், அரசரடி நீரேற்று நிலையம் மற்றும் கோச்சடை நீரேற்று நிலையத்திலும் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் சப்ளை பெற்று பணிகள் செய்யப்பட்டு வரப்படுகிறது.. சப்ளை உத்தரவு காலம் 31.8.2008–ந் தேதியுடன் முடிவதால் புதியதாக ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை சப்ளை பெற டெண்டர் வரவழைக்கும் பொருட்டு ரூ.18,35,000/-க்கு (ரூபாய் பதினெட்டு லட்சத்து முப்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மதிப்பீடு ஒப்புதலும் டெண்டர் வரவழைக்கலாம் என்பதற்கு மாமன்றத்தின் (தீர்மானம் எண்.568, நாள்:25.9.2008) ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மாமன்றத்தின் ஒப்புதலின்படி பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் சப்ளை பெற உரிய நாளிதழில் விளம்பரம் வெளியிட்டும் இணைய தளத்தில் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை வெளியிட்டும், ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்பச்சான்று மற்றும் விலைப்புள்ளிகள் மதிப்பாய்வு குழுவில் சரிபார்க்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி L1 ஒப்பந்தக்காரர் M/s.இண்டஸ்ட்ரியல் செக்யூரிட்டி பீரோ, க.எண். 82/41, மேலப்பொன்னகரம் 8வது தெரு, மதுரை 625016) நிறுவனத்தார் 2008–09 ஆம் ஆண்டு மதிப்பீடு விலை விகிதத்திற்கு 0.16% சதவீதம் குறைவாக சப்ளை செய்ய விலைப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்றுக்கொள்ளவும் அன்னாருக்கும் சப்ளை உத்தரவு வழங்கலாம் என்பதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .651**

**குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

## 10) HF1/ 41122 / 08

மதுரை மாநகராட்சி நலவாழ்வு மையம் 6 சாத்தமங்கலம் மையத்தில் பணிபுரிந்து வரும் திருமதி.P.தேவஈவு பல்நோக்கு சுகாதார பணியாளர் அவரது குடும்ப சூழ்நிலை காரணமாக சென்னை மாநகராட்சிக்கு பணிமாறுதல் செய்யக்கோரி மனு செய்துள்ளதின்பேரில் அவரை பணி மாறுதல் செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

1. மேற்படி ஒருவழி பணிமாறுதல் அரசின் உரிய ஆணை பெற்ற பின்னரே ஏற்கலாம்.
2. மேற்படி ஒருவழி பணிமாறுதல் தொடர்பாக பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.

**மாமன்ற தீர்மானம் எண் .652**

**இவரை பணிமாறுதல் செய்வதால் ஏற்படும் இந்த காலியிடத்தின் பணி பாதிக்கப்படும் என்பதை கருத்தில் கொண்டு இந்த மனுவை பரிசீலனை செய்ய வேண்டியதில்லை என மாமன்றம் தீர்மானிக்கிறது..**

## 11) HF1/ 41611 / 2008

மதுரை மாநகராட்சி நலவாழ்வு மையம் 5– கே.புதூர் மையத்தில் பணிபுரிந்து வரும் திருமதி.A.மாரியம்மாள், பல்நோக்கு சுகாதார பணியாளர் அவரது குடும்ப சூழ்நிலை காரணமாக ராஜபாளையம் நகராட்சிக்கு பணி மாறுதல் செய்யக்கோரி மனு செய்துள்ளதின் பேரில் அவரை பணிமாறுதல் செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

1. மேற்படி ஒருவழிப்பணி மாறுதல் அரசின் உரிய ஆணை பெற்ற பின்னரே ஏற்கலாம்.
2. ஒருவழிப்பணி மாறுதல் தொடர்பாக பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.

**மாமன்ற தீர்மானம் எண் .653**

**இவரை பணிமாறுதல் செய்வதால் ஏற்படும் இந்த காலியிடத்தின் பணி பாதிக்கப்படும் என்பதை கருத்தில் கொண்டு இந்த மனுவை பரிசீலனை செய்ய வேண்டியதில்லை என மாமன்றம் தீர்மானிக்கிறது..**

## 12) B1/000080/ 09

மதுரை மாநகராட்சி 2007-08ம் ஆண்டிற்கு பொங்கல் போனஸ் A மற்றும் B பிரிவினருக்கு ரூ.1000/- எனவும் C மற்றும் D பிரிவினருக்கு ரூ.2500/- எனவும் வழங்க அரசாணை எண்.G.O.No.556/ நாள்:30.12.2008ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையை மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் அரசாணையின்படி மாநகராட்சி ஊழியர்களுக்கு பொங்கல் போனஸ் வழங்கியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு .

1. 2007-08ல் ஆண்டில் 240 நாட்களுக்கு குறையாமல் பணியாற்றிய ஊழியர்களுக்கு பொங்கல் போனஸ் வழங்கப்படுகிறது.
2. பொங்கல் போனஸ் வழங்கப்படுவதால் சுமார் ரூ.1.00 கோடி கூடுதல் செலவு ஏற்படும்.

**மாமன்ற தீர்மானம் எண் .654**

**பதிவு செய்யப்பட்டது.**

## 13) ந பொ1 / 21231 / 06

வைகை நதி மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் குருவிக்காரன் சாலை பாலம் முதல் அண்ணாநகர் பாலம் வரை வைகை ஆற்றின் இடதுபுறம் கரையில் வெள்ளத்தடுப்பு கரை ஏற்படுத்தி அலை கற்கள் பதித்து தார்சாலை அமைத்து கைப்பிடி தடுப்பு அமைப்பது சம்பந்தமான 34 மதிப்பீட்டு பணிகளை ரூ.162.00 லட்சத்தில் பொதுப்பணித்துறையின் மூலம் மேற்கொள்ளுவதற்கு மாமன்ற தீர்மானம் எண்.354, நாள்:31.01.07 மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின்கீழ் கூடுதலாக தலா ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் மூன்று மதிப்பீட்டு பணிகளை மேற்கொள்ளுவதற்கு பொதுப்பணி துறையினரால் நிர்வாகம் ஒப்புதல் கோரப்பட்டு திட்டத்தின் இன்றியமையாமையை கருத்தில் கொண்டு மூன்று மதிப்பீட்டு பணிகளையும் மேற்கொள்ளுவதற்கு நிர்வாகம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு ரூ.177.00 லட்சம் மதிப்பீட்டு தொகையில் பொதுப்பணித்துறையினரால் மேற்கொள்ளப்படும் வைகை நதி சீரமைப்பு திட்ட பணிக்கு இதுவரை மாநகராட்சியில் ரூ.66.00 லட்சம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை நீர் வள ஆதார அமைப்பு பெரியாறு வைகை வடி நில கோட்டம் அவர்களின் 15.11.08-ந் தேதிய கடிதத்தில் மாநகராட்சியால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட 34 பணிகளில் 10பணிகளுக்கு மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது. என்றும் எஞ்சியுள்ள 24 பணிகள் மேற்கொள்ளவில்லையாதலால் தற்போதைய நடப்பாண்டு 2008–2009 தரப்படுத்தப்பட்ட விலை விகித அடிப்படையில் திருத்திய திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.155.00 லட்சத்தில் 31 பணிகளாக மேற்கொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் இப்பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும்படி கோரியுள்ளார்.

வைகை நதி சீரமைப்பு திட்டத்தின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு பொதுப்பணித்துறையினரால் தயாரிக்கப்பட்டுள்ளது திருத்திய திட்ட மதிப்பீடு தொகை ரூ.155.00 லட்சத்தில் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளவாறு 31 பணிகளை மேற்கொள்ளுவதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்குவது குறித்து மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .655**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 14) ந.பொ.1 / 00193 / 09

தமிழ் நாடு அரசின் சட்டமன்ற பேரவையில் 2008-09 ஆம் ஆண்டில் பட்ஜெட் கூட்ட தொடரில் தமிழ்நாட்டின் நகரிலுள்ள அமைந்துள்ள சாலைகளை சர்வதேச தரத்திற்கு உயர்த்த தமிழ்நாடு நகர சாலைகள் அபிவிருத்தி திட்டம் (Tamilnadu urbin Roads Development Project) நடப்பாண்டில் செயல்படுத்தப்படும் என மாண்புமிகு நிதிமைச்சரால் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக பாதாளச்சாக்கடை திட்டம் முடிவுற்ற பகுதிகளில் செயல்படுத்தும்பொருட்டு மதுரை மாநகராட்சி பகுதிகளில் தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு நிதி மற்றும் அரசு நிதிகளின் மூலம் நிறைவேற்றப்பட உள்ளது. மதுரை மாநகரில் உள்ள சாலைகளை அபிவிருத்தி செய்யும் தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (Tamilnadu urbin Road Infrastructure Project – TURIP) நடப்பாண்டு முதல் செயல்படுத்துவதற்கு அரசாணை (எண்.235 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 27.11.2008 –ன் மூலம் அனுமதி வழங்கி அத்துடன் திட்டம் அமுல்படுத்துவதற்குரிய வழிமுறை மற்றும் நடைமுறைகளை வகுத்துள்ளது. (இணைப்பு)

அ.கு :

1. பாதாளச்சாக்கடை திட்டம் முடிவுற்ற சாலைகளை தேர்ந்தெடுத்து உலகத்தரத்திற்கு மேம்படுத்த மாமன்றம் முடிவு செய்யலாம்.

2. அரசாணை எண்:235 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:27.11.2008ல் தெரிவித்துள்ள வழிகாட்டுதல் மற்றும் நடைமுறைப்படி இத்திட்டத்தை செயல்படுத்த “தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிறுவனம்“ மூலம் “திட்ட வடிவமைப்பு ” மற்றும் “செயல்படுத்தும் ஆலோசகரை” மாநகராட்சி சார்பாக மேற்படி திட்டத்தை இம்மாநகராட்சியில் மேற்கொள்ள மாமன்றம் தீர்மானிக்கலாம்.

<u>மாமன்ற தீர்மானம் எண் .656</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>.

## 15) மே.பொ 3 / 21446 / 08

மதுரை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.27 க.எண்.52 மேலப்பொன்னகரம் 2வது தெரு தேவி கருமாரியம்மன் கோவில் ஆலயத்தில் உள்ள குடிநீர் குழாய் இணைப்பு எண்.C/3371 ஆகும். மேற்படி கோவிலுக்கு 2008-2009 வரை குழாய்வரி நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி இடத்திற்கு வழிபாட்டு தலத்தில் அடிப்படையில் குழாய் வரி செலுத்துவதிலிருந்து வரிவிலக்கு அளிப்பது மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் .657</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது</u>.

(ஒம்...) ஜி. தேன்மொழி
மேயர்
மதுரை மாநகராட்சி

மதுரை
நாள் : **27.01.2009**

* * * * * * *

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

மதுரை மாநகராட்சி

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2009**ம் ஆண்டு **ஜனவரி** திங்கள் **27-ம்** நாள் **செவ்வாய்கிழமை** காலை **12.30** மணிக்கு

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## <u>அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்</u>

### 1. சி.டபுள்யு.3/ 1436/2007

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)-ன்படி 21.01.2009ம் தேதி நடைபெற்ற வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.
குறிப்பு: வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**<u>மாமன்ற தீர்மானம் எண் .658</u>**
**<u>பதிவு செய்யப்பட்டது.</u>**

### 2. சி.டபுள்யு.3/ 0883/2007

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)-ன்படி 21.01.2009ம் தேதி நடைபெற்ற வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.
குறிப்பு: வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**<u>மாமன்ற தீர்மானம் எண் .659</u>**
**<u>பதிவு செய்யப்பட்டது.</u>**

### 3. சி.டபுள்யு.3/ 01051/2009

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)-ன்படி 23.01.2009ம் தேதி நடைபெற்ற நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.
குறிப்பு:நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**<u>மாமன்ற தீர்மானம் எண் .660</u>**
**<u>பதிவு செய்யப்பட்டது.</u>**

### 4.B 11 / 001045 / 2009

தமிழக அரசு ஊழியர்களுக்கு, மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்திற்கு இணையாக ஊதியம் வழங்க வேண்டும் என்கிற நல்லெண்ணத்தில் அமைத்துள்ள 6–வது ஊதிய நிர்ணயம் ஆணையானது தனது அறிக்கையை அரசிற்கு சமர்ப்பிக்க மேலும் மூன்று மாத கால காலநீட்டிப்பு செய்துள்ள நிலையில் ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்க அரசு முடிவெடுத்து அரசாணை எண்.10 நிதித்துறை நாள்:13.01.09ல் அரசாணை ஒன்றை வெளியிட்டுள்ளது.

மேற்கண்டுள்ள நிதித்துறை அரசாணை எண்.10, நாள்:13.01.09-ல் தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு 01.01.09–ல் இரண்டாண்டு காலம் முழுமையாக பணிபுரிந்துள்ள அனைத்து நிலை

ஊழியர்களுக்கும் அடிப்படை ஊதியம் + தனி / சிறப்பு ஊதியம் + அகவிலை ஊதியம்+ அகவிலைப்படி ஆகியவற்றின் கூட்டத்தொகையின் மூன்றுமாத ஊதியத்தையும் இரண்டாண்டுகள் முழுமையாக பூர்த்தியடையாத ஊழியர்களுக்கு ஒரு மாத ஊதியத்தை இடைக்கால நிவாரணமாக வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

இவ்வரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் அனைத்தும் உள்ளாட்சி நிறுவனமான மாநகராட்சி ஊழியர்களுக்கும் பொருந்தும் என்பதால் மேற்படி திருத்திய ஊதியம் நிர்ணயம் கணக்கீடப்பட்டு மாநகராட்சி ஊழியர்களுக்கும் வழங்க இவ்வாணையை மாமன்றத்தின் தகவலுக்கு, பார்வைக்கும் வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .661**
**பதிவு செய்யப்பட்டது.**

## 5. B 11 / 001045 / 2009

தமிழக அரசின் ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு, மத்திய அரசு ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்திற்கு இணையாக ஊதியம் வழங்க வேண்டும் என்கிற நல்ல எண்ணத்தில் அமைத்துள்ள 6வது ஊதிய நிர்ணயம் ஆணையமானது தனது அறிக்கையை அரசிற்கு சமர்ப்பிக்க மேலும் மூன்று மாத கால காலநீட்டிப்பு செய்துள்ள நிலையில் ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம் அரசு முடிவெடுத்து அரசாணை எண்.11 நிதித்துறை நாள்:13.01.09ல் அரசாணை ஒன்றை வெளியிட்டுள்ளது.

மேற்கண்டுள்ள நிதித்துறை அரசாணை எண்.11, நாள்:11.01.2009ல் தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு 01.01.09-ல் உள்ள அடிப்படை ஓய்வூதியம் + அகவிலை ஓய்வு ஊதியம் + அகவிலைப்படி ஆகியவற்றின் கூட்டுத்தொகையின் மூன்று மாத ஓய்வூதியத்தையும் இடைக்கால நிவாரணமாக வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

இவ்வரசாணையில் குறிப்பிட்டுள்ள பொருள் அனைத்தும் உள்ளாட்சி நிறுவனமான மாநகராட்சி ஓய்வூதியர்களுக்கும் பொருந்தும் என்பதால் மேற்படி திருத்திய ஓய்வூதியம் கணக்கிடப்பட்டு மாநகராட்சி ஓய்வூதியர்களுக்கும் வழங்க இவ்வாணையை மாமன்ற தகவலுக்கும், பார்வைக்கும் வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .662**
**பதிவு செய்யப்பட்டது.**

## 6. மபொ 2 / 00555/ 2009

அரசாணை (எம்.எஸ்) எண்.90 ந.நி (ம) கு.வ.துறை (எம்.சி.II) நாள் : 22.5.08ல் ஆணையிடப்பட்டபடி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயற்குறிப்பு உத்தரவு கடிதம் ந.க.எண். 29494 – 2008 D1 நாள் : 5.9.08 மூலம் நடமாடும் குடிநீர் கசிவு சரிசெய்தல் மற்றும் வேன்களில் பழுது நீக்குதல் வாகனம் (Mobile water leak defection and repairing Vans Blue brigade) மதுரை மாநகராட்சிக்கென வாங்குவதற்கு ரூ.10.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வாகனம் வாங்குவது சம்பந்தமாக தொழில் நுட்ப விபரங்கள் மற்றும் வழி முறைகள் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்கண்ட வாகனத்தின் உபயோகத்தையும் அத்தியாவசியத்தையும் கருத்தில் கொண்டு ந.நி ஆணையரக அலுவலத்தால் தெரிவிக்கப்பட்டுள்ள தொழில் நுட்ப விபரக்குறிப்புகளில் Part – I-Vehicle Chasisல் குறிப்பிட்டுள்ளவாறு DGS & D விலை விகிதத்தில் கொள்முதல் செய்வது சம்பந்தமாக டி.வி. சுந்தரம் அய்யங்கார் ீ சன்ஸ் லிமிடெட் மதுரை நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலைபுள்ளியில் கீழ்க்கண்டவாறு வாகனத்தின் விபரம் மற்றும் அதன் விலை விகிதம் குறிப்பிடப்பட்டுள்ளது.

| வாகன விபரம் | விலை |
|---|---|
| Ashok Leyland Ecomet 912 – 3600mm<br>WB Cabin & Chasis | Rs. 6,25,987/- |

மேற்கண்ட DGS & D விலை விகிதத்தை ஏற்று ஷை வாகனத்தை விரைவில் சப்ளை செய்யும் பொருட்டு M/S டி.வி.சுந்தரம் அய்யங்கார் ீ சன்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு ரூ. 6,25,987/- வாகனத்தை காப்பீடு செய்வதற்கு M/S ராயல் சுந்தரம் அலயன்ஸ் இன்ஷரன்ஸ் கம்பெனி லிமிடெட்ற்கு ரூ. 26,629/- ம் வாகனத்தை தற்காலிகமாக பதிவு செய்வதற்கு M/S அபராஜிதா கார்பரேட் சர்வீஸஸ் பிரைவேட் லிமிடெட்ற்கு ரூ. 2400/- ம் முன் பணமாக வழங்கப்பட்டுள்ள விபரத்தை மாமன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும், சமாப்பிக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .663**
**பதிவு செய்யப்பட்டது.**

**7. மநி 1/ 18107/ 2006**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் மதுரை மாநகர அபிவிருத்தி திட்டப்பணிகளுக்கு தொழில்நுட்ப அனுமதிகள் காலதாமதம் ஏற்படாமல் வழங்க ஏதுவாக மதுரை மாநகராட்சியில் உள்ள கண்காணிப்பு பொறியாளர் பணியிடத்தை தலைமைப் பொறியாளர் பணியிடமாக தகுதி உயர்த்தவும், கண்காணிப்பு பொறியாளர் திரு.கே.சக்திவேல் அவர்களை தலைமைப் பொறியாளராக பதவி உயர்வு செய்யவும், அரசுக்கு பிரேரணை அனுப்பி வைக்க மதுரை மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண்கள் 335 நாள்:31.01.2007 மற்றும் 96 நாள்:18.07.2007–ல் தீர்மானிக்கப்பட்டதின் பேரில் அரசுக்கு பிரேரணைகள் அனுப்பி வைக்கப்படுகிறது.

அதன்பேரில், மதுரை மாநகராட்சியில் கண்காணிப்பு பொறியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.கே.சக்திவேல், அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நீதிப்பேராணை மனு எண்கள்.26430/2008, 26431/2008, 26432/2008, 26433/2008 ஆகியவற்றில் உயர்நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பிற்கு உட்பட்டு தலைமை பொறியாளராக பதவி உயர்வு அளித்தும் தலைமை பொறியாளர் நிலை உயர்த்தப்பட்ட நகரப்பொறியாளர் பணியிடத்தில் பணிநியமனம் செய்தும் வெளியிடப்பட்டுள்ள **23.1.2009–ந்** தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறையின் **2(**3டி**)** எண்ணிட்ட அரசாணையினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : திரு.கே.சக்திவேல், கண்காணிப்பு பொறியாளர், 23.01.2009 பிற்பகல் முதல் தலைமை பொறியாளராக பணியேற்பு செய்துள்ளார்.

**மாமன்ற தீர்மானம் எண் .664**

**பதிவு செய்யப்பட்டது.**

**8) மபொ .7/ 42361/ 2009**

அரசாணை எண் 203, வீட்டுவசதி மற்றும் நகர்புற மேம்பாட்டுத்துறை நாள் 24.8.08-ன் மூலம் தெரிவு செய்யப்பட்ட புராதன நகரங்களில் புராதன நகர மேம்பாட்டு திட்டத்தின்கீழ் அபிவருத்தி பணிகள் மேற்கொள்ளுவதற்கு மதுரை மாநகராட்சிக்கென ரூ.50.00 லட்சம் நகர் ஊரமைப்பு வாரிய வளர்ச்சி நிதியிலிருந்து 100% மானியமாக வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. இந்நிதியின் கீழ் மதுரை நகருக்கான புராதான மேம்பாட்டு திட்ட உத்தேசங்களில் அனுப்பி வைக்கும்படி நகர் ஊரமைப்பு ஆணையரால் கோரப்பட்டுள்ளது.

மதுரை மாநகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள பெரியார் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு 30 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. தற்போது மக்கள் தொகையின் பெருக்கத்தினால் உள்ளூர் மற்றும் வெளியூர் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளதை தொடர்ந்து போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டு பொது மக்கள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகி வருகின்றன. எனவே இப்பெரியார் பேருந்து நிலையத்தை நவீன முறையில் விரிவுபடுத்த வேண்டிய கட்டாயம் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இது சம்பந்தமாக தொழில் நுட்ப வல்லுனர்களால் வழங்கப்பட்ட ஆலோசனையின்பேரில் பெரியார் பேருந்து நிலையத்தை நவீன தொழில் நுட்ப முறையில் விரிவுபடுத்துவதற்கு திட்ட வரைபடம் மற்றும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

பெரியார் பேருந்துநிலையத்தை விரிவுபடுத்த தயார் செய்யப்பட்ட வரைபடத்தின்படி முதற்கட்டமாக Kerbwall & Cement paver Block Platform ஒரு பகுதியில் அமைத்து சிமெண்ட கான்கீரிட் சாலை அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.50.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டு பணியை நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து 100% மானியமாக வழங்கப்படவுள்ள தொகையின் மூலம் மேற்கொள்ளுவதற்கு திட்ட பிரேரணைகள் நகர் ஊரமைப்பு துறைக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .665**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**9) JnS2/21387/2008**

மதுரை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் விடுபட்ட பகுதிகளில் பாதாளச்சாக்கடை அமைத்தல் மற்றும் பழைய பாதாளச்சாக்கடை பகுதிகளை புதிப்பித்தல் மற்றும் கழிவுநீர் சுத்திகரித்தல் போன்ற பணிகளுக்கு ரூ.229.34-கோடி திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மாநில அரசின் நிர்வாக ஒப்புலும், நகராட்சி நிர்வாக ஆணையரின் தொழில்நுட்ப ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. மாமன்றம் தீர்மானம் எண்.39, நாள் :18.07.07 மூலம் இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தின் பணிகள் **3** சிப்பங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. சிப்பம் 1 மற்றும் **2** முறையே அவனியாபுரம் மற்றும் சக்கிமங்கலத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டுவதற்கும், சிப்பம் **3–ல்** பழைய பாதாள சாக்கடை அமைப்பை புதுப்பிக்கும் பணியும், விடுபட்ட பகுதிகளுக்கு

பாதாள சாக்கடை அமைக்கும் பணியும் ஆகும். முதல் **2** சிப்பங்களுக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

சிப்பம் **3**–ல் உள்ள விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைக்கும் பணிக்கு பழைய பாதாளச்சாக்கடை பகுதிகளை புதுப்பிக்கும் பணிக்கும் ரூ.125.66-கோடிக்கு விரிவான மதிப்பீடு தயார் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது.

சிப்பம் III-க்கு முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் 27.03.2008 அன்று கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி நாளன்று ஒப்பந்தப்புள்ளி எதுவும் பெறப்படவில்லை. மீண்டும் இரண்டாவது முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் 06.05.2008 அன்று கேட்கப்பட்டு இரண்டாவது முறையாகவும் ஒப்பந்தப்புள்ளி எதுவும் பெறப்படவில்லை. இதனிடையே அடுத்த நகராட்சி நிர்வாக ஆணையரக கண்காணிப்பு பொறியாளர் அவர்களால் தொழில்நுட்ப ஒப்புதல் 09.06.2008-அன்று ரூ.135.24-கோடிக்கு பெறப்பட்டது. மூன்றாவது முறையாக 16.07.2008 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இம்முறை கீழ்கண்ட ஒரே ஒரு நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது.

**1)** M/s.டிசி.எஸ்.–எஸ்.இ.டபிள்யு – ஜோதி

மேற்படி நிறுவனத்தினரால் கொடுக்கப்பட்ட விலைப்புள்ளிகள் திறனாய்வு குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் விலைக்குறைப்பு செய்யப்பட்டு பின் மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக ஆணையரின் தலைமையில் உள்ள தமிழ்நாடு அரசு ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிப்பு குழு பரிந்துரை செய்தது. மேற்படி குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இம்மதிப்பீடு மீண்டும் திருத்திய தொழில்நுட்ப அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களால் **24.10.2008** அன்று ரூ.135.24-கோடிக்கு ஒப்புதல் பெறப்பட்டு பின் நான்காவது முறையாக **05.12.2008** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

இம்முறை கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது.

1) M.s.TCL –SEW-JYOTH (Joint Venture)
   C/o.SEW Infrastructure Ltd.,
   No.6-3-871, Snchalate,
   Green Lands Road, Besumpet,
   Hyderabad – 500 016.
2) M/s.Deepika Infrastructure Pvt Ltd.,
   8-2-686/C/D/5 Road No.12, Banjara Hills
   Hyderabad - 500 034

M/s.தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் (Tamil Nadu Water Investment Corporation) விலைப்புள்ளிகளை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க பணி அமர்த்தப்பட்டது. இந்நிறுவனம் M/s.டி.சி.எல் – எஸ்.இ.டபிள்யு – ஜோதி மற்றும் M/s.தீபிகா இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் இரண்டு நிறுவனமும் தொழில்நுட்ப தகுதி உடையது என்றும் ஒப்பந்தப்புள்ளி மீதான மேல்நடவடிக்கை தொடரலாம் என ஆய்வறிக்கை சமர்ப்பித்துள்ளது. மேற்படி ஆய்வறிக்கை மதுரை மாநகராட்சியால் அமைக்கப்பட்ட திறனாய்வுக் குழுவில் வைக்கப்பட்டது. திறனாய்வுக்குகு மேற்படி நிறுவனங்களின் விலைப்புள்ளிகளை திறக்கலாம் என முடிவு எடுக்கப்பட்டது. அதன் அடிப்படையில் 23.12.08 அன்று விலைப்புள்ளி உறை மேற்படி நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் திறனாய்வுக்குழு உறுப்பினர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. மேற்கண்ட இரண்டு நிறுவனங்கள் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் கொடுத்துள்ளனர்.

| ***வ. எண்*** | ***வேலையின் விபரம்*** | ***M/s.டி.சி.எல்.எஸ்.இ. டபிள்யு – ஜோதி*** | ***தீபிகா Infrastructure*** |
|---|---|---|---|
| 1 | மதுரை மாநகராட்சியில் பழைய கழிவு நீர் குழாய்களை புதுப்பிக்கவும், பாதளாச் சாக்கடை கழிவு நீர் சேகரிப்பு குழாய்களை அமைக்கவும், தலைமை கழிவு நீரேற்று நிலையத்திற்கு செல்லும் உந்து குழாய்களை புதுப்பிக்கவும் உபகழிவு நீரேற்று நிலையங்களையும் தலைமைக் கழிவு நீரேற்று நிலையத்தை புதுப்பித்தல் | 1352096241.25 | 1379015417.07 |
| 2 | மேற்படி வேலைக்கு Modification Cover-ல் ஒப்புக் கொண்ட விலை | 1321497600.00 | 1310722881.00 |
| | மதிப்பீட்டு தொகையில் கூடுதல் சதவிகிதம் | 30.18 | 29.12 |

மேற்படி இரண்டு நிறுவனத்தாரால் கொடுக்கப்ட்ட விலை விகிதத்தை திறனாய்வு குழு ஒப்பீடு செய்து குறைந்த விலை விகிதம் கொடுத்த மைசர்ஸ் தீபிகா இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்றும் இந்நிறுவனத்திடம் விலை குறைப்பு பேச்சு வார்த்தை செய்யலாம் என்றும் திறனாய்வுக்குழு பரிந்துரை செய்தது.

மேற்படி நிறுவனத்தாரோடு 06.01.2009 அன்று விலை குறைப்பு பேச்சுவார்த்தை செய்ததில், தீபிகா இன்பிராஸ்ட்ரக்சர் நிறுவனம் ஏற்கனவே குறிப்பிட்ட தொகையான ரூ.131.073 கோடியிலிருந்து ரூ.131.00-கோடியாக விலைக்குறைப்பு செய்து சம்மதக் கடிதம் கொடுத்துள்ளனர். இவ்விலைவிகிதம் Modification Cover-ல் கொடுக்கப்பட்டுள்ள கூடுதல் விலை விகிதத்திலிருந்து 0.07% (29.12% லிருந்து 29.50%) குறைவாகும். திறனாய்வுக்குழு மேற்படி நிறுவனத்தார் விலைக்குறைப்பில் கொடுத்துள்ள விலை விகிதத்தை பரிசீலனைக்கு எடுத்து கொள்ளலாம் என்று பரிந்துரை செய்துள்ளது.

திறனாய்வுக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் தீபிகா நிறுவனத்தார் பழைய கழிவு நீர் குழாய்களை புதுப்பிக்கவும், பாதாளச் சாக்கடை விடுபட்ட பகுதிகளுக்கு புதிய கழிவு நீர் சேகரிப்பு குழாய்களை அமைக்கவும், தலைமை கழிவு நீரேற்று நிலையத்தில் இருந்து கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு செல்லும் உந்து குழாய்களை புதுப்பிக்கவும், உபகழிவு நீரேற்ற நிலையங்களையும் தலைமை கழிவு நீரேற்று நிலையத்தை புதுப்பிக்கவும் கொடுத்துள்ள விலைவிகிதத்தை ஏற்று தீபிகா நிறுவனத்தார் விலை குறைப்பு பேச்சுவார்த்தையில் கொடுத்துள்ள ரூ.131.073 கோடி விலைவிகிதத்தை நகராட்சி நிர்வாக ஆணையரின் தலைமையில் உள்ள தமிழ்நாடு அரசு ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிப்பு குழு ஒப்புதலுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் .666</u>

<u>குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.</u>

## 10) JnS2/39657/2006

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் இரண்டாவது வைகை குடிநீர் திட்டப்பணிக்கு ரூ.2585.43-இலட்சங்கள் கடன் நிதியுதவி வழங்க தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி (TNUDF) நிறுவனம் இசைவு தெரிவித்துள்ளது. இக்கடன்வழங்குவதற்கு தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி (TNUDF) நிறுவனத்தால் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படும் சிறப்பு விதிமுறைகள் மற்றும் வரையறைகளும், மேலும் இதர வழிமுறைகள் மற்றும் வரையறைகளை மாநகராட்சி ஏற்றுக் கொள்ள வேண்டுமென தெரிவித்துள்ளது.

**சிறப்பு வழிமுறைகள் மற்றும் வரையறைகள்**

1) <u>வட்டி (Interst)</u>

ஒவ்வொரு முறை வழங்கப்படும் தொகைக்கு ஆண்டு வட்டி விகிதம் 9.50% சதவீதமாகும். இவ்வட்டி விகிதம் கடன் தொகை விடுவிக்கப்படும் போது அமுல்படுத்தப்படும். வட்டி விகிதம் ஐந்து வருடத்திற்கு ஒரு முறை மாற்றி அமைக்கப்படும்.

2) <u>கடன் திரும்ப செலுத்தும் காலம் (Repaymenyt Period )</u>

கடனை திரும்ப செலுத்தும் காலம் 20 வருடங்களாகும். இக்கடனுக்குரிய அசல் தொகையை 5 ஆண்டு காலம் (Prinicipal Moratorium Period ) தாழ்த்தி செலுத்த ஆரம்பிக்கலாம். இக்கடனுக்குரிய அசல் தொகையை 15 ஆண்டு காலத்தில் 30 அரையாண்டு தவணைகளாக செலுத்த வேண்டும். கடன்தாழ்த்தி செலுத்தும் காலத்திற்கு (Moratorium Period) தனி வட்டி (Single Interest) செலுத்த வேண்டும்.

3) <u>செல்லத்தக்க நிலை (Validity )</u>

கடன் ஒப்பந்தம் அமுல்படுத்தப்படும் நாளிலிருந்து இரண்டு ஆண்டு காலத்திற்குள் கடன் தொகை விடுவிக்கப்படும். இக்காலத்திற்குள் கடன் தொகையை உபயோகப்படுத்த இயலாத நிலையில் மாமன்றத்தின் ஒப்புதலோடு கடன் வழங்கும் காலத்தை நீட்டிக்க கோர வேண்டும். இக்கோரிக்கை எழும் பட்சத்தில் தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி (TNUDF) நிறுவனம் இதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகளை தெரிவிக்கும்

4) <u>செயற்படுத்தல் காலம் (Implementation Period )</u>

செயல்படுத்தப்படவுள்ள குடிநீர் விநியோக திட்டப் பணியை ஆரம்பித்த நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டும்.

5) <u>திட்ட நிதி மற்றும் நிதி வழிவகை (Project Cost and Means of Finance )</u>

மாநகராட்சி மேற்கண்ட குடிநீர் விநியோக திட்டப் பணியை ரூ.7863.80 இலட்சங்களில் செயற்படுத்துதல் குறித்து கீழ்கண்ட நிதி வழிவகை சம்பந்தமாக தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிதி (TNUDF) இசைவை பெற்று கடன் ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட வேண்டும்.

| வ. எண். | வழிவகை (Means) | நிதி விபரம் (ரூ.இலட்சத்தில்) (Rs.In Lakhs ) |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி (TNUDF) கடன் | 2585.43 |
| 2. | மத்திய அரசின் மானியம் | 2965.80 |
| 3. | மாநில அரசின் மானியம் | 1186.30 |
| 4. | மாநகராட்சி மற்றும் பொதுமக்கள் பங்குத் தொகை | 1003.47 |
| | **மொத்தம்** | **7741.00** |
| | IDC- மாநகராட்சி பங்குத் தொக | **122.80** |
| | **நிகர மொத்தம்** | **7863.80** |

6) **<u>கடன் வழங்கும் காலம் (Disbursement of Term Loan)</u>**

a) மாமன்றத்தின் ஒப்புதலோடு அரசிடமிருந்து நிர்வாக தொழில்நுட்ப ஒப்புதல்களை மாநகராட்சி பெற வேண்டும்.

b) குடிநீர் வைப்புத் தொகை ரூ.3000- வீதம் மாநகராட்சி பகுதிகளில் 25644 எண்ணிக்கையில் வழங்கப்படவுள்ள புதிய வீட்டு குடிநீர் இணைப்புகளுக்கும் ரூ.10000-வீதம் 2982 எண்ணிக்கையில் வழங்கப்படவுள்ள வீட்டு உபயோகத்திற்கு அல்லாத புதிய குடிநீர் இணைப்புகளுக்கும், குழாய் கட்டணத் தொகையாக மாதம் ரூ.75- வீதம் ஏற்கனவேயுள்ள 80495 வீட்டு இணைப்புகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் 2982 இணைப்புகளுக்கும் வசூல் செய்வது சம்பந்தமாக மாமன்றத்தின் ஒப்புதலை பெற வேண்டும்.

7) **<u>இணைப்புகள், வைப்புத் தொகை மற்றும் கட்டணம் (Connections, Deposits & Tariff)</u>**

**a)** 25644 எண்ணிக்கையில் புதிய வீட்டு குழாய் இணைப்புகள் மற்றும் 2982 எண்ணிக்கையில்_ வீட்டிணைப்பு அல்லாத குழாய் இணைப்புகள் வழங்கும் இலக்கை இரண்டு வருட காலத்திற்குள் எய்த வேண்டும்.

**b)** கீழ்க்கண்ட குழாய் கட்டணம் மற்றும் வைப்புத் தொகையின் அடிப்படையில் புதிய குடிநீர் விநியோக திட்டத்தை மாநகராட்சி செயல்படுத்த வேண்டும்

| இணைப்புகளின் வகை | முந்தைய வைப்புத் தொகை | புதியவைப்புத் தொகை | முந்தைய கட்டணம் | புதிய கட்டணம் |
|---|---|---|---|---|
| வீட்டு இணைப்புகள் | **1000** | **3000** | **75** | **75** |
| வீட்டிணைப்பு அல்லாத இணைப்புகள் | **2000** | **10000** | **150** | **150** |

**c)** குழாய் கட்டணத் தொகையில் **75 %** குறைவில்லாமலும் நிலுவை கட்டணத் தெகை **60%** குறைவில்லாமலும் வசூல் செய்வது குறித்து மாநகராட்சி உறுதியளிக்க வேண்டும்.

8) மாநகராட்சி ESCROW வங்கி கணக்கு ஆரம்பித்து இவ்வங்கி கணக்கில் சம்பந்தப்பட்ட திட்டப் பணியின் மூலம் வரும் வருவாயை முதலீடு செய்ய வேண்டும். திட்டப் பணிக்குரிய இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவகளை மேற்கண்ட ESCROW வங்கி கணக்கின் மூலம் மேற்கொள்ள வேண்டும். திட்டப்பணிக்குரிய வருவாயில் தேவைகளை பூர்த்தி செய்ய இயலாத அளவில் பற்றாக்குறை ஏற்படும் பட்சத்தில் மாநகராட்சியின் பொது வருவாய்களை மேற்கண்ட வங்கி கணக்கில் வரவு வைக்க வேண்டும் ESCROW வங்கி கணக்கை இலகுவாக இயங்ககுவது சம்பதமாக மாநகராட்சி வங்கி மற்றும் தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி சேவை கழகம் (TNUIFSL) ஆகியலவகலள ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

**<u>9) கடன் சேவைக்கான காப்பு நிதி (Debit service Reserve Fund</u> )**

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி ( TNUDF) நிறுவனத்தினதால் வழங்கப்படும் கடனுக்கான வட்டி மற்றும் அசல் தொகையை உரிய காலத்தில் செலுத்துவதை உறுதி செய்யும் பொருட்டு மாநகராட்சி கடன் சேவைக்கானகாப்பு நிதி கணக்கு (Debit service Reserve Fund Account) ஆரம்பித்து இரண்டு ஆறு மாத கடன் தவனை தொகையை மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி ஆகிய கூட்டு பெயரில் வைப்பு தொகையாக செலுத்த வேண்டு

**<u>10) ஏற்பளித்தல் (Approval / Clearances)</u>**

குடன் வழங்குவது மற்றும் கடன் ஒப்பந்தம் செய்து கொள்வது சம்பந்தமான விதிமுறைகள் மற்றும் வரையறைகளை ஏற்றுக் கொள்வது சம்பந்தமாக மாமன்றத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும் .

**<u>11) முன் செலுத்துதல் (pre payment)</u>**

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி ( TNUDF) நிறுவனத்தினதால் வழங்கப்படும் கடன் தொகை கடன் திரும்ப செலுத்தும் காலத்திற்கு முன்பாகவே மாநகராட்சி செலுத்தும் பட்சத்தில்.கடன் நிலுவைத் தெகையில் ஒரு சதவீத தொகையை நிலுவைத் தெகையில் ஒரு சதவீத தொகையை கடன் தொகையுடன் திரும்ப செலுத்தப்பட வேண்டு

**<u>12) இதர விதிமுறைகள் மற்றும் வரையறைகள்</u>**

a) திட்டப் பணிகள் நடைபெற்று கொண்டிருக்கும் போது எந்த நேரமும் உ திட்டப் பணியை நேராய்வு செய்வதற்கு TNUIFSL நிறுவனத்திற்கு உரிமையுண்டு.

b) திட்டப் பணியின் தாமதத்தினாலோ அல்லது மூலம் பொருட்களின் விலை யேற்றத்தினாலோ ஏற்படும் கூடுதல் திட்டச் செலவினத்தை மாநகராட்சியின் சொந்த நிதியின் மூலம் ஈடு செய்து கொள்ள வேண்டும்'

c) திட்டப் பணி செயல்படும் பட்சத்தில் 25644 எண்ணிக்கையில் வீட்டு இணைப்புகளும் 2982 வீட்டிணைப்பு அல்லாத பிற இணைப்புகளும் வழங்க இயலாத சூழ்நிலையில் எற்படும் நிதிப் பற்றாக்குறையை மாநகராட்சியின் பொதுநிதியின் மூலம் ஈடு செய்ய வேண்டும்.

d) மாநகராட்சி TNUIFSL ன் அனுமதி பெறாமல் வேறு எந்தவிதமான நிறுவனங்களிடம் கடன் வழங்க கோரமாட்டோம் என உறுதியளிக்க வேண்டும்

மேற்கண்டவாறு வரிசை எண்.1 முதல் 12 வரை குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகள் மற்றும் வரைமுறைகளை மாநகராட்சி ஏற்றுக் கொள்வதற்றும் அதனை அமுல்படுத்துவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் .667</u>
**TNUDF கொடுத்துள்ள நிபந்தனைகளை மாமன்றம் ஏற்று குறிப்பு ஒப்பு கொள்ளப்பட்டது**

**<u>11) B 30/ 001008/ 2009</u>**

மதுரை மாநகராட்சி எல்லைக்குள் குடிநீர் குழாய் இணைப்புகள் இல்லாத பகுதிகள் குடிநீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் தனியார் லாரிகள் 5 எண்ணம் (உத்தேசமாக ஒரு வாகனம் 8 நடைகள் ) ஒப்பந்த அடிப்படையில் சப்ளை பெற்று குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. தனியார் நிறுவனத்தாரின் ஒப்பந்தக் காலம் 28.2.2009–ல் முடிவடைவதால் 01.03.2009 முதல் 28.2.2010 முடிய தனியார் லாரிகள் 5 எண்ணம் ஒப்பந்த அடிப்படையில் சப்ளை பெறுவதற்கு ரூ. 42,04,800/- (ரூபாய் நாற்பத்தி இரண்டு இலட்சத்து நான்காயிரத்து எண்ணூறு மட்டும்)–க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீடு நிர்வாக ஒப்புதலுக்கும், ஒப்புதல் பெற்ற பின்னர் டெண்டர் வரவழைப்பதற்கும் மாமன்றத்தின் ஒப்புலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் .668</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

**<u>12. மே.ம.பொ.5/ 627/2009</u>**

மதுரை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு 70 காளவாசல் பகுதியிலுள்ள குழந்தையானந்த சுவாமி திருக்கோவிலுக்கு தினமும் ஏராளமான பக்தர்களுக்கு சுவாமி தரிசனம் செய்ய வருகை புரிவதால் கட்டணமின்றி இலவசமாக ஒரு குடிநீர் குழாய் இணைப்பு மட்டும் வழங்க மாமன்றத்தின் அனுமதி கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் .669</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

**<u>13. மே.ம.பொ.5/ 00494/2009</u>**

மதுரை மாநகராட்சி வார்டு எண் 71(பெத்தானியாபுரம்) கட்டுப்பட்ட அண்ணாமெயின்வீதியில் உள்ள அய்யனார் குறுக்குத் தெருவில் கடந்த பல ஆண்டுகளாக (மாசா) பவுண்டேஷன் சமூக நல நிறுவன அமைப்பின் சார்பாக 1 வயது முதல் 12 வயது வரை மன மூளை வளர்ச்சியற்ற குழந்தைகளை கொண்டு பராமரித்து **வரும் சமூக நல நிறுவனமான மாசா பவுண்டேஷன் நிறுவனத்திற்கு வார்டு எண் 25ல் உள்ள பிள்ளையார் தெருவில் கட்டிடத்தை மாசா பவுண்டேஷன் நிறுவனத்திற்கு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.**

<u>மாமன்ற தீர்மானம் எண் .670</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

**14) B 30/ Est 15875/2006**

மதுரை மாநகராட்சி லாரி நிறுத்துமிடத்தில் உள்ள பல ஆண்டுகளுக்கு மேலாக உபயோகப்படுத்தப்பட்டு தற்போது உபயோகப்படுத்த இயலாது நிலையில் கழிதல் செய்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட 13 டிராக்டர், டிரெய்லர் மற்றும் டிரெய்லர் வாட்டர் டாங்க்) வாகன இனங்கள் தற்போது உள்ள நிலையிலேயே வேளாண்மை பொறியியல் துறை மூலம் உரிய விலை மதிப்பீடு பெற்று ஏலம் டெண்டர் மூலம் விற்பனை செய்ய மாமன்றத்தின் (தீர்மானம் எண்.116, நாள்:1.06.2005) ஒப்புதல் பெறப்பட்டது. அதன்பேரில் அரசு வேளாண்மை பொறியில் துறை நிர்வாகப் பொறியாளர் வாகனங்களை ஆய்வு செய்து கழிதல் சான்று மற்றும் மதிப்பீடு நிர்ணயித்து கொடுத்துள்ள மதிப்பீட்டின் பேரில் வாகனங்களை ஏலம், டெண்டர் மூலம் விற்பனை செய்ய உரிய நாளிதழ்களில் விளம்பரம் வெளியிட்டு பலமுறை ஏலம், டெண்டர் கோரியதில் ஏவரும் மதிப்பீட்டிற்கு கூடுதலாக டெண்டர் கொடுக்கவில்லை. எல்லைக்குள் குடிநீர் குழாய் இணைப்புகள் இல்லாத பகுதிகள் குடிநீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் தனியார் லாரிகள் 5 எண்ணம் (உத்தேசமாக ஒரு வாகனம் 8 நடைகள்)

| வ. ண் | கோப்பு எண் | வாகனம் எண் | வாகனத்தின் பெயர் | மாடல் | ஏலம் டெண்டர் கோரியது | வேளாண்மை பொறியியல் துறை பொறியாளரின் 29.12.05ந்தேதிய மதிப்பீடு (ரூபாய்) | டெண்டர் தொகை (ரூபாய்) | குறைவு (ரூபாய்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B30/00072/06 | TN59C6060 | டிராக்டர் | 1993 | 6 முறை | 42000 | 9500 | 32500 |
| 2 | B30/00073/06 | TN59C7337 | டிராக்டர் | 1993 | 6 முறை | 42000 | 12100 | 29900 |
| 3 | B30/15869/06 | TN59D2062 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 7500 | 21500 |
| 4 | B30/15870/06 | TN59C7576 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 8500 | 19500 |
| 5 | B30/15871/06 | TN59C6789 | டிரெய்லர் | 1993 | 4 முறை | 28000 | 9000 | 19000 |
| 6 | B30/15872/06 | TN59D2065 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 7500 | 20500 |
| 7 | B30/15874/06 | TN59C8000 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 8500 | 19500 |
| 8 | B30/15875/06 | TN59C5678 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 8000 | 20000 |
| 9 | B30/15877/06 | TN59D2063 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 6500 | 21500 |
| 10 | B30/15878/06 | TN59D2067 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 10000 | 18000 |
| 11 | B30/15879/06 | TN59D2066 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 8000 | 20000 |
| 12 | B30/15880/06 | TN59D7070 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 9000 | 19000 |
| 13 | B30/16961/06 | MDA221 | டிரெய்லர் | 1993 | 5 முறை | 28000 | 7500 | 12500 |
| **மொத்தம்** | | | | | | 3920000 | 111600 | 273400 |

மேற்கண்ட விபரப்படி மதிப்பீட்டிற்கு மிகவும் குறைவாக டெண்டர் வரப்பட்டு உள்ளதை அனுமதிக்க இயலாமல் நிராகரிக்கப்பட்டுள்ளது. கழிதல் வாகனங்கள் நிறுத்தப்பட்டு நீண்டக்காலமாவதால் அதன் மதிப்பீடு மேலும் குறையும் நிலையில் உள்ளது என்ற நிலையில் இவற்றிற்கான மதிப்பீட்டினை உரியப்படி மறு நிர்ணயம் செய்து இவற்றை கழிக்க வேண்டியது அவசியமாகிறது என்பதால் மறுசீராய்வுக்குழு ஒன்று அமைத்து மேற்கண்ட வாகனங்களுக்கு மதிப்பீடு மனு நிர்ணயம் செய்து இவற்றை கழிதல் செய்யும் நடவடிக்கை எடுக்கலாம் என மாமன்றத்தின்(தீர்மானம் எண்.244 நாள்:28.11.2007 ) ஒப்புதல் பெறப்பட்டது.

அதன்படி மாநகராட்சிக்கு அலுவலர்கள் மற்றும் வேளாண்மை பொறியியல் துறை உதவி பொறியாளர் தமிழ்நாடு போக்குவரத்துக்கழகம் உதவி பொறியாளர் ஆகியோர் லாரி நிறுத்துமிடத்தில் வாகனங்களை பார்வையிட்டு பரிசீலனை செய்து மேற்கண்ட வாகனங்களை எடைபோட்டு ஸ்கிராப் நிலையில் உத்தேச மதிப்பீடு தயாரித்து விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டது. அதன்படி டிரெய்லர், டிராக்டர் எடைபோட்டு மொத்த எடை 11895 கிலோவுக்கு மாநகராட்சி மதிப்பு ரூ.1,90,320/- என நிர்ணயம் செய்து உரிய அறிவிப்பு வெளியிட்டு ஏலம் கோரியதில் ஏலத்தில் கலந்துக்கொண்ட நான்கு ஏலத்தாரர்களில் திரு.எஸ்.எம்.ஆறுமுகம்(Madurai Corporation Lorry stand Road, Madurai District) அவர்கள் உயர்ந்தப்பட்ச ஏலக் கேள்வியாக ரூ.2,17,679/- (ரூபாய் இரண்டு இலட்சத்து ஏழாயிரத்து அறுநூற்று எழுபத்தி ஒன்பது மட்டும்) கேட்டுள்ளார். ஏலம் நிபந்தனைபடி ஏலத்தொகையில் 50% தொகை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

மாநகராட்சி மதிப்பிற்கு ரூ.27,359/- கூடுதலாக கேட்டுள்ள திரு.எஸ்.எம்.ஆறுமுகம் அவர்கள் ஏலத்தினை ஏற்றுக் கொள்ளவும் ஏலத் தொகையுடன் விற்பனை வரி சேர்த்து செலுத்திய பின்பு அன்னாருக்கு கழிதல் வாகனங்களை டெலிவரி கொடுக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .671**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**15. ம.பொ.7/ ம.எ.01505/2009**

மதுரை மாநகராட்சி வார்டு **25** டி.டி.ரோடு குறுக்குத் தெருவில் உள்ள சத்துணவு கூடம் மைய எண் **117**, கட்டிடம் மிகவும் பழுதடைந்து சுவற்றில் விரிசல்கள் ஏற்பட்டு அபாயக்கரமான நிலையில் உள்ளது. இந்த சத்துணவுக் கூடத்திற்கு வருகை தரும் குழந்தைகளை அருகில் உள்ள மைய எண் **115,116–**ல் மாற்றம் செய்யலாம். பழுதடைந்த சத்துணவுக்கூடம் மைய எண்.**117** கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தி அதே காலியிடத்தில் சிறுவர் பூங்கா அமைக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .672**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**16) ம.வ.2 / 35536 /2008**

மதுரை மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட வருவாய் தரும் இனங்களுக்கான மார்க்கெட்டுகள் , நவீன கழிப்பிடங்கள், ஆடு, மாடு வதை செய்யும் இடங்கள், கார், வேன், சைக்கிள் ஸ்டாண்டுகள், சுற்றுலா வாகனங்கள் நிறுத்தும் இடங்கள், அவனியாபுரம் மற்றும் சக்கிமங்கலம் புல் பிளாட்கள் ஆகியவற்றிற்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 2009-2010 –ம் ஆண்டிற்கு டெண்டர்/பொது நலம் நடத்துவதற்கும் மற்றும் நீக்கம் செய்வதற்கும் புதிய இனங்கள் சேர்ப்பதற்கும், வரைவு டெண்டர்/பொது ஏலம் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் முடிவிற்கு கூட்டப்பொருள் வைத்தத்தில் கீழ்க்கண்டவாறு தீர்மாமனம் தீர்மானிக்கிறது.

**தீர்மானம்**

மதுரை மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட வருவாய் தரும் இனங்களுக்கு 2009-2010-ம் ஆண்டிற்கு நடத்தப்படும் ஏல இனங்களுக்கு மாநகராட்சியின் மதிப்பில் 25% கூடுதலாக ஏலம் / டெண்டர் நடத்த வேண்டியது என்றும் பட்டியலில் கண்டுள்ள சில ஏல இனங்களை நீக்கம் செய்ய வேண்டியது என்றும் சில புதிய இனங்களை சேர்க்க வேண்டும் என்றும் அதற்கான புதிய மதிப்பை நிர்ணயம் செய்ய வேண்டியதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மான எண் **23**, நாள்:21.01.2009-ன்படி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட வருவாய் தரும் ஏல இனங்களுக்கு **2009–10–**ம் ஆண்டிற்கு ஏலம் நடத்துவதற்கும் சில இனங்கள் நீக்கம் செய்வதற்கும் சில புதிய இனங்கள் சேர்ப்பதற்கும் அதற்கான புதிய மதிப்பு நிர்ணயம் மாமன்றத்தின் முடிவினை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு:
1. ஏலம் நடத்த வேண்டிய இனங்கள் மற்றும் சேர்க்க வேண்டிய இனங்களில் மதிப்பீடு பட்டியல் தயாரித்து கோப்பில் வைக்கப்பட்டுள்ளது.
2. ஏலத்திலிருந்து நீக்கம் செய்ய வேண்டிய இனங்களின் பட்டியல் அதற்கான விபரத்தினை குறிப்பில் எழுதி தயாரித்து கோப்பில் வைக்கப்பட்டுள்ளது.
3. பொது ஏலம் / டெண்டர் நிபந்தனைகள் தயாரித்து கோப்பில் வைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் .673**

**இந்தப் பொருள் சம்பந்தமாக தீர்மானிக்கப்பட்ட வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. ஏலம் நடத்துவதிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ள பட்டியலில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற திட்டப் பணிகள் மேற்கொள்வதற்கு நீக்கம் செய்யப்பட்டுள்ள இனங்களில் ,**

**வரிசை எண்.1 பாரதியார் நவீன சிறப்பங்காடி நடுவில் அமைந்துள்ள கழிப்பிடம்**
**வரிசை எண்.2 பாரதியார் நவீன சிறப்பங்காடி டூரிஸ்ட் கார், வேன் வசூல் உரிமம்**
**வரிசை எண்.3 பசும்பொன் முத்துராமலிங்கம் நாளங்காடி திறந்தவெளி தினசரி மார்க்கெட்**
**வரிசை எண்.5 சென்ட்ரல் மார்க்கெட் சைக்கிள் ஸ்டாண்டு**

**ஆகியவைகள் JNNURM திட்டப்பணி ஆரம்பிக்கும் வரை, துறை மூலம் வசூல் செய்யும்போது நிர்வாகச் செலவு கூடுதல் வரும் என எதிர்பார்ப்பதால், இதனை கருத்தில் கொண்டு மாநகராட்சி நிர்ணயம் செய்துள்ள மதிப்புத் தொகையில் 15% கூடுதலாக நிர்ணயம் செய்து, அதில் ஒவ்வொரு மாத ஈவுத் தொகையை கணக்கிட்டு பழைய ஏலதாரரே திட்டம் ஆரம்பிக்கும் வரை வசூலித்து, பின் மாநகராட்சியில் ஒப்படைக்க வேண்டியது எனவும்,**

**சென்ட்ரல் மார்க்கெட் சைக்கிள் ஸ்டாண்டில் சைக்கிள் , மோட்டார் சைக்கிள் ஸ்கூட்டருக்கு வசூலிப்பதுபோல் ஆட்டோக்களுக்கும் கட்டணம் வசூலிக்க வேண்டியது எனவும்,**

**அவனியாபுரம் புல் பிளாட் 1,2,3,4 & 6- ல் JNNURM திட்டப்பணிகளுக்கு தேவைப்படும் இடம் தவிர மற்ற இடங்களை ஏலம் விடவேண்டியது எனவும் ,**

**ஏலம் விடும் இனம் வரிசை எண்.20, ராம் நகர் தினசரி மார்க்கெட் ஏல இனத்தில், தெற்குவாசல் மீன் மார்க்கெட் ஏல இனத்தில் உள்ளதுபோல் தலைச்சுமை கூடைகள், மீன் பெட்டி (BOX) ஆகியவைகளை சேர்ந்து வசூலிக்கவும்.**

**வரிசை எண்.60 ராம்நகர் (மீன்) மார்க்கெட் சரக்கு வாகனம் நிறுத்துமிடம் கட்டண வசூலில், இருசக்கர வாகனம் ஸ்கூட்டர், சைக்கிள், டிரை சைக்கிள் மற்றும் சரக்கு ஏற்றும் இறக்கும். வாகனம் சேர்த்து வசூலிக்கவும்,**

**ஏலம் விடப்படவேண்டிய இனங்களில் வரிசை எண்.69 வி.பி.ரத்னசாமி நாடார் தெரு (வருமான வரி அலுவலகம் அருகில் ) சைக்கிள் ஸ்டாண்டு ஏல இனத்தில் நேதாஜி மெயின்ரோடு, பி.டி.ராஜன் ரோடு, காட்டுப்பிள்ளையார் கோவில் வரை சேர்த்து வசூலிக்கவும்,**

**ஏலம்விடப்பட வேண்டிய இனங்களில் வரிசை எண்.62– மாநகராட்சி அலுவலக வாகனங்கள் நிறுத்துடமிடம் வரிசை எண்.74 மதுரை மாநகராட்சி ஈகோ பார்க் வாகனங்கள் நிறுத்துமிடம் தனித்தனியாக குறிப்பிடப்பட்டுள்ளதை ஒருங்கிணைத்து சென்ற ஆண்டு ஏலம் விடப்பட்டுள்ளது போல், ஒரே ஏல இனமாக சேர்த்து ஏலம் விடவேண்டியது எனவும்,**

**ஏலம் நடத்துவதில் இருந்து நீக்கம் செய்யப்படும் இனங்களில் வரிசை எண்.19 விளக்குத்தூண் கழிப்பிடம் ஏல இனத்தை ஒன்றன் பின் ஒன்றாக (ஆண் ,பெண்) பராமரித்து ஏலம் விட வேண்டியது எனவும், பராமரித்து பணிபார்ப்பதற்காக ஏலம் நடத்துவதில் இருந்து நீக்கப்பட்ட இனங்களில் மராமத்து பணி முடிந்தவுடன், குத்தகைக்கு விட நடவடிக்கை எடுக்க வேண்டியது எனவும்,**

**ஏலம் விடப்படும் இனங்களில், வரிசை எண்.72, கிருதுமால் நதி பிள்யைார் பாளையம் ரோடு, தினசரி சாலையோர காய்கறி மார்க்கெட் நடத்துவதற்கான பணிகள் முடிக்கப்படும் வரை, ஏற்கனவே நடைபெற்று வந்த தெற்குவாசல் மார்க்கெட்டிலேயே தொடர்ந்து மார்க்கெட் இயங்கும் வகையில் ஏலம் விடவேண்டியது எனவும்,**

**ஏலம் விடப்பட வேண்டிய இனங்களில், வரிசை எண்–6–ல் மாநகராட்சி தினசரி மார்க்கெட் (புதுமாகாளிப்பட்டி ரோடு) இடத்தில், ஆரம்ப பள்ளிக்கூடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளதால், இதனை ஏலம் இனத்திலிருந்து நீக்கம் செய்யவும்,**

**புதிய ஏல இனங்களுக்கு மேயர் மற்றும் ஆணையாளர் கலந்து பேசி அதற்கான ஏலத்தொகை நிர்ணயம் செய்ய வேண்டியது எனவும்,**

**மேற்கண்ட இனங்கள் தவிர, மற்ற இனங்களுக்கு மாநகராட்சி உத்தேச மதிப்பிலிருந்து ஓராண்டுக்கு ஏலம் விடும் பட்சத்தில், 15% உயர்வு செய்தும் (2009-2010) ஆண்டுக்கு மூன்றாண்டுகளுக்கு (2009-2012) அரசாணை வரப்பெற்றால், 25% எனவும், உயர்வு செய்து ஏலம் விடவும் மாமன்றம் தீர்மானிக்கிறது.**

## 17) <u>ம.வ.8 / 37223 /2008</u>

மதுரை மாநகராட்சியில் உள்ள பேருந்து நிலையங்களில் தமிழ் புத்தக கடைகள் வைக்க அனுமதி வழங்கி, தமிழ்நூல் விற்பனைக்கென ஒதுக்கீடு செய்யப்படும் இரண்டு கடைகளில் ஒரு கடையை தென்னிந்தியா புத்தக விற்பனையாளர் மற்றும் வெளியீட்டாளர் சங்கத்திற்கு வழங்க அரசாணை (2ப) எண்.664 நகராட்சிநிர்வாகம் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, ஒதுக்கீடு செய்யலாம் எனக் கருதி ஆணையிடப்பட்டுள்ளது.

1. தென்னிந்திய புத்தக விற்பானையாளர் மற்றும் வெளியீட்டாளர் சங்கம் தங்களுக்கு ஒதுக்கப்படும் பெட்டி கடைகளில் தமிழக நூல்கள் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும்.
2. அவ்வாறு மேற்படி சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் பெட்டிக் கடைகளுக்கு மாத வாடகை ரூ.200/- அல்லது அப்பகுதியில் நிலவும் உயர்ந்த குத்தகைத் தொகையை நான்கில் ஒரு பங்கு இவற்றில் ஏதோ குறைவோ அதனை பொது நலம் தவிர்த்து நிர்ணயம் செய்யலாம்.
3. நிபந்தனைகள் மீறப்படுமாயின் மேற்படி சங்கத்திற்கான குத்தகை ரத்து செய்யப்படும்.
4. பெட்டி கடையை தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் வெளியீட்டாளர் சங்கம் தன்னுடைய சொந்த செலவில் நிர்மானித்துக் கொள்ள வேண்டும்.

பாரதி புத்தகாலயம் நடத்தி பெரியார் பேருந்து நிலையத்தில் பொருட்கள் வைக்கும் அறையும், கிழக்கு பகுதியில் உள்ள கட்டிடத்தில் 13x10 அளவில் புத்தக கடை வைக்க மாதாந்திர லைசென்ஸ் தொகையை ரூ.2340/- க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பாரதி புத்தகாலயத்தின் 20.11.2008ம் தேதிய மனுவில், அரசாணை (2ப) எண்.664 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்க (நநி4) துறை நாள்:05.05.2008ன்படி மாத லைசன்ஸ் தொகையை நிர்ணயம் செய்து கொடுக்கப்படி கேட்கப்பட்டுள்ளது.

அரசாணையில் பெட்டிகடைக்கு மாதாந்திர லைசென்ஸ் தொகை ரூ.200/-என நிர்ணயம் செய்யப்பட்டதை போல், இந்நிறுவனத்தின் கட்டிட கடைக்கு மாதாந்திர லைசன்ஸ் தொகை நிர்ணயம் செய்ய கோரியுள்ள கோரிக்கை மாமன்றத்தின் முடிவுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் .674</u>

<u>அரசாணையில் உள்ளது போல் மாத லைசென்ஸ் தொகை நிர்ணயம் செய்ய குறிப்பு கொள்ளப்பட்டது.</u>

## 18) <u>ம.வ.2 / 39379 /2008</u>

மதுரை மாநகராட்சியில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தில் புதுப்பிக்கப்பட்ட பிளாட்பாரம் எண்.2 (புதிய நடைபாதை 3) ஆண்கள்,கட்டிட கழிப்பறை மற்றும் பிளாட்பாரம் எண்.2 (புதிய நடைபாதை 4) பெண்கள் கட்டிட கழிப்பறைக்கு மாமன்ற தீர்மானம் எண்.560, நாள்25.09.2008ன்படி 2007-2008–ம் ஆண்டு ஏலம் மதிப்பிலிருந்து ஒவ்வொரு ஆண்டிற்கும் 15% உயர்வு செய்து மூன்றாண்டுகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ஒப்படைப்பு செய்யுமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாமன்ற தீர்மானத்தின்படி சக்தி மாரியம்மன் மகளிர் சிறுசேமிப்பு மற்றும் சிக்கன நாணயம் சங்கத்திற்கு ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் பிளாட்பாரம் எண்.2 (புதிய நடைபாதை 3) ஆண்கள் கட்டண கழிப்பறை 2007-2008 ம் ஆண்டு ஏலம் மதிப்பு ரூ.7,50,000/-லிருந்து ஒவ்வொரு ஆண்டிற்கும் 15% உயர்வு செய்து மூன்று ஆண்டுகளுக்கு கட்டணம் வசூலிப்பதற்கு உரிமம் வழங்க பணம் செலுத்துவதற்கு மவ2/29379/08 எண்.17.12.2008 ம் தேதி உத்தரவு வழங்கப்பட்டது.

| | |
|---|---|
| முதல் ஓராண்டிற்கு செலுத்த வேண்டிய உரிமம் தொகை | ரூ. 8,62,500/- |
| இரண்டாவது ஆண்டிற்கு செலுத்த வேண்டிய உரிமம் தொகை | ரூ. 9,91,875/- |
| மூன்றாம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய உரிமம் தொகை | ரூ.11,40,650/- |

கல்கி மகளிர் சிறுசேமிப்பு மற்றும் சிக்கன நாணயம் சங்கத்திற்கு ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் பிளாட்பாரம் எண்.2 (புதிய நடைபாதை 4) பெண்கள் கட்டண கழிப்பறைக்கு 2007-2008 ம் ஆண்டு ஏல மதிப்பு ரூ.4,70,500/- லிருந்து ஒவ்வொரு ஆண்டிற்கும் 15% உயர்வு செய்து மூன்று ஆண்டுகளுக்கு கட்டணம் வசூலிப்பதற்கு உரிமம் வழங்க பணம் செலுத்துவதற்கு மவ2/29379/2008 எண்.17.12.2008ம் தேதியில் பணம் செலுத்துவதற்கு உத்தரவு வழங்கப்பட்டது.

| | |
|---|---|
| முதல் ஓராண்டிற்கு செலுத்த வேண்டிய உரிமம் தொகை | ரூ. 5,41,075/- |
| இரண்டாவது ஆண்டிற்கு செலுத்த வேண்டிய உரிமம் தொகை | ரூ. 6,22,236/- |
| மூன்றாம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய உரிமம் தொகை | ரூ. 7,15,571/- |

மேற்படி உத்தரவின்பேரில் சக்தி மாரியம்மன் மகளிர் சிறுசேமிப்பு மற்றும் சிக்கன நாணயம் சங்கம் கல்கி மகளிர் சிறுசேமிப்பு மற்றும் சிக்கன நாணய சங்கம் ஆகிய சங்களின் தலைவர்கள் 19.12.2008ம் தேதியில் விண்ணப்பம் செய்து மேற்கண்டவாறு நிர்ணயம் செய்த உரிமத் தொகையை மறு பரிசீலனை செய்ய மாமன்றத்தின் முடிவினை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .675**

**மகளிர் சுயஉதவிக் குழுக்களின் மனு பரிசீலிக்கப்பட்டது. அவர்களது கோரிக்கையை ஏற்று வியாபார நோக்கோடு இயங்காமல், சமூக நலம் கருதி சேவை செய்யும் மகளிர் குழுவை ஊக்குவிக்கும் பொருட்டு, கடந்த 3 ஆண்டின் சராசரி குத்தகைத் தொகையில் 50% செலுத்தி, மூன்று ஆண்டுகளுக்கு மாநகராட்சி சார்பாக இந்த மகளிர் சுய உதவி குழுக்கள் பராமரிக்க, அனுமதி வழங்க தீர்மானிக்கிறது..**

**(ஒம்) ஜி. தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் :27.01.2009**

<u>மாமன்றக்கூட்டப்பொருள் : 27.01.2009</u>

# Out of Agenda

**1) <u>மநி.1 / 6659 /08</u>**

மதுரை மாநகராட்சி பொறியியல் பணிவிதிகளில் மதுரை மாநகராட்சிக்கு 3:1 என்ற விகிதத்தில் 27 உதவி பொறியாளர்கள் மற்றும் 9 இளநிலை பொறியாளர்கள் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது, மதுரை மாநகராட்சி பொறியியல் பணிவிதிகளின்படி உதவி பொறியாளர் பணியிடங்கள் நேரடி நியமனத்தின்மூலம் நிரப்பப்பட வேண்டியதாகும், இதன்படி காலியாக இருந்த 8 உதவி பொறியாளர் பணியிடங்களை நேரடி நியமனத்தின் மூலம் நிரப்பிட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியல் பெறப்பட்டு நேர்காணல் நடத்தப்பட்டது. இதற்கிடையில் மதுரை மாநகராட்சியில் தொழில்நுட்ப உதவியாளர்களாக பணிபுரிந்து வரும் திருவாளர்கள் எஸ்.பாபு, பி.மணி, பி.எஸ்.மணியன், டி.தியாகராசன், எஸ்.அருள்சகாயசேவியர், டி.சந்தனம், ஆகிய 6 நபர்கள் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மதுரை மாநகராட்சி மீது W.P.No.2058/2008-ல் வழக்கு தொடர்ந்து மேற்படி வழக்கில் 5.3.08-ந் தேதியில் MP/(MD) No.2 & 3/2008, வழங்கப்பட்டுள்ள தீர்ப்பில் மேற்படி வழக்கின்மீது இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படும் வரை, நேர்காணலின் முடிவினை பிரதிவாதி வெளியிடக்கூடாது என்று தடையாணை விதிக்கப்பட்டுள்ளது.

தற்போது மேற்கண்ட ஆறு தொழில்நுட்ப உதவியாளர்களும் இந்த வழக்கின்மீது பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடையாணையின் அடிப்படையில் தாங்கள் பொறியியல் பட்டப்படிப்பு (பி.இ-கட்டிடவியல்) முடித்து தேர்ச்சி பெற்றுள்ளதால், தங்களை காலியாக உள்ள உதவி பொறியாளர் பணியிடங்களில் பணி உயர்வு செய்து, உதவி பொறியாளராக நியமனம் செய்ய ஆணை வழங்க கோரி 29.12.2008ம் தேதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுக்கள் பரிசீலிக்கப்பட்டது.

மேற்கண்ட உதவி பொறியாளர் பணியிடங்கள் நேரடி நியமனத்தின் மூலம் நிரப்பப்பட வேண்டிய பணியிடமாக இருந்தாலும், அரசாணை (பத்தாண்டு) எண் 416, ந.நி. மற்றும் கு.வ(மந4) துறை, நாள் 15.09.1999 –ல் உதவி பொறியாளர் / தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளில் முறையான காலியிடங்களுக்கு நேரடி நியமனம் செய்யப்படும்பொழுது பொறியியலில் பட்டம் / பட்டயம் பெற்று , கீழ்நிலை பதவிகளில் பணியாற்றுபவர்களை நியமனம் செய்ய பரிசீலிக்கலாம் என்று மதுரை மாநகராட்சி ஆணையாளர் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையிலும் உயர்நீதிமன்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தடையாணையின் அடிப்படையிலும், 1) திரு.எஸ்.பாபு, 2) திரு.P.மணி, 3) திரு.வி.எஸ்.மணியன் 4) திரு.டி.தியாகராஜன் 5) திரு.எஸ்.அருள்சகாய சேவியர் 6) திரு.டி.சந்தனம், தொழில் நுட்ப உதவியாளர்களை முற்றிலும் தற்காலிகமாக ரூ.6500-200-10500 என்ற ஊதிய விகிதத்தில் அரசின் உறுதியாக்கம் பெற வேண்டுமென்ற நிபந்தனையின் அடிப்படையில் உதவி பொறியாளராக பதிவு உயர்வு வழங்கி அதற்கான ஊதியம் வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் .676</u>

<u>மதுரை உயர்நீதிமன்ற வழக்கின் இறுதி ஆணைக்குட்பட்டு பதவி உயர்வு வழங்க குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.</u>

**2) <u>மநி.1 / 11816 /2000</u>**

மதுரை மாநகராட்சி பொறியியல் பணி விதிகளில் அனுமதிக்கப்பட்டிருந்த உதவி பொறியாளர் பதவி உயர்வு பணியிடங்கள் எண்ணிக்கையில் மிக குறைந்த அளவே இருந்ததால் கீழ்நிலையில் பணிபுரிந்த தகுதி வாய்ந்த பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதில் அதில் ஏற்படும் சிரமத்தை தவிர்க்கும் பொருட்டு மதுரை மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட 27 உதவி பொறியாளர் பணியிடங்களில் 6 பணியிடங்களை தொழில் நுட்ப உதவியாளர் பணியிடங்களாக தற்காலிகமாக இறக்கம் (Down Grade) செய்தும் இப்பணியிடங்களில் பொறியியல் பட்டயம் (DCF) பெற்ற வேலை ஆய்வாளர்களை 5 ஆண்டுகளுக்குள் அன்னார்கள் பொறியியல் பட்டம் (BE) பெற வேண்டும் என நிபந்தனை விதித்து பதவி உயர்வு செய்ய அரசின் அனுமதி கோரப்பட்டது. அதனடிப்படையில் அரசாணை (நிலை) எண் 41 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் .29.03.2000-ல் 6(ஆறு) தொழில் நுட்ப உதவியாளர்களை பணியிடங்களாக தற்காலிகமாக இறக்கம் செய்து ஆணையிடப்பட்டது. அதன்படி மநி2/11816/2000 எண்ணிட்ட **20.04.2000**ம் தேதிய ஆணையாளர் அவர்களின் செயற்குறிப்பில் திருவாளர்கள் 1) பி. சுப்பிரமணியன் 2) எஸ்.சர்புதீன் 3) கே.துர்காதேவி 4) ஆர்.முருகன் 5) எஸ்.அரசி ஆகிய ஐந்து பணியாளர்களும் தொழில் நுட்ப உதவியாளர்களாக பணிபுரிய உத்தரவிடப்பட்டது. மேற்படி உத்தரவு வெளியிடப்பட்ட நாள் முதல் 5 ஆண்டு காலத்திற்குள் மேற்கண்ட 5 தொழில் நுட்ப உதவியாளர்களும் பொறியியல் பட்டம் (B.E) பெற வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. மேற்கண்ட அரசாணை மற்றும் உத்தரவின்படி பி.சுப்பிரமணியன் , ஆர்.முருகன் மற்றும் எஸ்.அரசு ஆகிய 3 தொழில் நுட்ப உதவியாளர்களும் பி.இ. பட்டம் பெற்றதால் உதவி பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இதில் வரிசை எண் 3ல்

உள்ள திருமதி.கே. துர்காதேவி தற்பொழுது இம்மாநகராட்சியில் இளநிலை பொறியாளராக பணிபுரிந்து வருகிறார். அன்னார் இதுவரை பி.இ பட்டம் தேர்ச்சி பெறவில்லை. வரிசை எண் 2ல் திரு.எஸ்.சர்புதின் இளநிலை பொறியாளராக பணிபுரிந்து வருகிறார். இவர் தற்போது பி.இ பட்டம் பெற்று தேர்ச்சி பெற்றுவிட்டதாகவும் உதவி பொறியாளர் பதவி உயர்வு வழங்கக்கோரி 12.01.2009ல் சமர்ப்பிக்கப்பட்ட மனு பரிசீலிக்கப்பட்டது.

மேற்கண்ட அரசாணை மற்றும் ஆணையாளர் அவர்களின் செயற்குறிப்பின்படி திரு.எஸ்.சர்புதீன் இளநிலை பொறியாளர் ஐந்தாண்டுகளுக்குள் பி.இ பட்டம் தேர்ச்சி பெறவில்லை இவர் மேலும் கூடுதலாக மூன்றாண்டுகள் கழித்து 24.12.2008ல் பி.இ. பட்டம் முடித்ததற்கு மாமன்ற விலக்கு அளிக்கவும். உதவி பொறியாளர் பணியிடத்திற்கு உரிய தகுதியுள்ள நிலையில் இளநிலைப் பொறியாளராக பணியாற்றிவரும் திரு.எஸ்.சர்புதீன் அவர்களை உதவி பொறியாளராக அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு 6500-200-10500 என்ற ஊதிய விகிதத்தில் முற்றிலும் தற்காலிகமாக பொறியாளராக பதிவு உயர்வு வழங்க அதற்கான ஊதியம் வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் .677</u>

<u>குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.</u>

## 3) <u>ம.நி.1 / 11816 /2000</u>

மதுரை மாநகராட்சி பொறியியல் பணிவிதிகளில் மதுரை மாநகராட்சிக்கு 3:1 என்ற விகிதத்தில் 27 உதவி பொறியாளர்கள் மற்றும் 9 இளநிலை பொறியாளர்கள் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மதுரை மாநகராட்சி பொறியாளர் பணிவிதிகளின்படி உதவி பொறியாளர் பணியிடங்கள் நேரடி நியமனத்தின் மூலம் நிரப்பப்பட வேண்டியதாகும். இதன்படி காலியாக இருந்த 8 உதவி பொறியாளர் பணியிடங்களை நேரடி நியமனத்தின் மூலம் நிரப்ப வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பட்டியல் பெறப்பட்டு நேர்காணல் நடத்தப்பட்டது. இதனை ஆட்சேபித்து மதுரை மாநகராட்சியில் தொழில்நுட்ப உதவியாளர்களாக பணிபுரிந்துவரும் திருவாளர்கள். எஸ்.பாபு உட்பட ஆறு நபர்கள் சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் மதுரை மாநகராட்சி மீது **W.P.No.2058/2008** வழக்கு தொடர்ந்து நேர்காணலின் முடிவினை பிரதிவாதி வெளியிடக்கூடாது என்று தடையாணை பெற்றனர். அந்த தடையாணையின் அடிப்படையில் மேற்கண்ட ஆறு தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு உதவிப் பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கவும் திரு.எஸ். சர்புதீன், இளநிலை பொறியாளருக்கு உதவிப் பொறியாளராக பதவி உயர்வு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில், ஒரு உதவி பொறியாளர் பணியிடம் காலியாக உள்ளது.

திருமதி.கே.இந்திராதேவி, தொழில் நுட்ப உதவியாளர், பி.இ பட்டப்படிப்பு முடித்து தேர்ச்சி பெற்றுள்ளதாகவும், உதவிப் பொறியாளர் பதவி உயர்வு வழங்கக்கோரி சமர்ப்பிக்கப்பட்ட 6.1.2009-ஆம் தேதிய மனு பரிசீலனை செய்யப்பட்டது.

மேற்கண்ட உதவிப் பொறியாளர் பணியிடங்கள் நேரடி நியமனத்தின் மூலம் நிரப்பப்பட வேண்டிய பணியிடமாக இருந்தாலும், அரசாணை (பத்தாண்டு) எண். 416, ந.நி மற்றும் கு.வ. (மந4) துறை, நாள்: 15.9.1999-ல் உதவிப் பொறியாளர் / தொழில் நுட்ப உதவியாளர் பதவிகளில் முறையான காலி இடங்களுக்கு நேரடி நியமனம் செய்யப்படும் பொழுது பொறியியலில் பட்டம்/பட்டயம் பெற்று, கீழ்நிலை பதவிகளில் பணியாற்றுபவர்களை நியமனம் செய்ய பரிசீலிக்கலாம் என்று மதுரை மாநகராட்சி ஆணையாளருக்கு அறிவுறுத்தப்பட்டது.

அதனடிப்படையிலும் மனுதாரர் திருமதி.கே.இந்திராதேவி, தொழில்நுட்ப உதவியாளர், மதுரை மாநகராட்சி மற்றும் அரசு மீது தாக்குதல் செய்துள்ள அனைத்து வழக்குகளையும் வாபஸ் பெற வேண்டும் என்ற நிபந்தனையிலும் திருமதி.கே.இந்திராதேவி தொழில் நுட்ப உதவியாளரை முற்றிலும் தற்காலிகமாக அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு உதவி பொறியாளராக 6500-200-10500 என்ற ஊதிய விகிதத்தில் உதவி பொறியாளராக பதிவு உயர்வு வழங்கி அதற்கான ஊதியம் வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்ற தீர்மானம் எண் .678</u>

<u>குறிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது.</u>

## <u>4) B 30/ 02243/08</u>

மதுரை மாநகராட்சி வைகை குடிநீர் திட்டம், பண்ணைபட்டி வைகை குடிநீர் சுத்தகரிக்கும் பணிகள், பைப்லைன்கள் பழுதுபார்த்தல், பராமரித்தல் மற்றும் இதர பணிகளை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் கீழ்காணும் 20 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

| வ.எண் | பணியாளர்களின் பெயர் | பணி விபரம் |
|---|---|---|
| 1 | திரு.A. குருமூர்த்தி | மின் பணியாளர் |
| 2 | திரு.R.சின்ராஜ் | மின் பணியாளர் |
| 3 | திரு.A.கலீல் ரகுமான் | மின் பணியாளர் |
| 4 | திரு.G.மணிகண்டன் | பிட்டர் |
| 5 | திரு.பாலகிருஷ்ணன் | ஒட்டுனர் |
| 6 | திரு.குருநாதன் | காவலர் |

| | | |
|---|---|---|
| 7 | திரு.கே.மருதமுத்து | பராமரிப்பு உதவியாளர் |
| 8 | திரு.எஸ். காட்டுராஜா | பராமரிப்பு உதவியாளர் |
| 9 | திரு.பி.கே.பி. ஆனந்த் பத்மநாதசிவா | பராமரிப்பு உதவியாளர் |
| 10 | திரு.அசரப் அலி | பராமரிப்பு உதவியாளர் |
| 11 | திரு.ஆர். சந்திரமோகன் | மஸ்தூர் Category – 1 |
| 12 | திரு.முருகவேல் | மஸ்தூர் Category – 1 |
| 13 | திரு.ஆர். சுரேஷ் | வால்வு ஆப்ரேட்டர் |
| 14 | திரு. எஸ்.செந்தில்குமார் | வால்வு ஆப்ரேட்டர் |
| 15 | திரு.பி.முருகன் | பைப்லைன் பிட்டர் |
| 16 | திரு.சசிக்குமார் | வால்வு ஆப்ரேட்டர் |
| 17 | திரு.திருப்பதி | வால்வு ஆப்ரேட்டர் |
| 18 | திரு.விஜயா | வால்வு ஆப்ரேட்டர் |
| 19 | திரு.எஸ். பொன்னுபாண்டி | வால்வு ஆப்ரேட்டர் |
| 20 | திரு.வி.கிருஷ்ணபிரசாத் | வால்வு ஆப்ரேட்டர் |

மேற்கண்ட ஒப்பந்த பணியாளர்கள் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வருவதால் தங்களை மாநகராட்சியின் நிரந்தர பணியாளர்களாக பணிநியமனம் செய்ய மனு செய்துள்ளதை வரி பரிசீலனை செய்து பணியாளர்களை வேலைவாய்ப்பு அலுவலகம், கல்வித்தகுதி மற்றும் வயதுவரம்பு ஆகியவற்றை தளர்த்தி நிரந்தரம் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் ஒப்புதல் பெறுவதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .679**

**சம்பந்தப்பட்ட ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்து, மேயர் மற்றும் ஆணையாளர் கலந்துப்பேசி மாமன்ற கூட்டத்தில் வைக்க வேண்டியது.**

**(ஒம்) ஜி. தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் :27.01.2009**